DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
22 OCT 2021
CHENNAI-600 015

**சுருக்கம்**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு பணியிட மாறுதல் மற்றும் பணி நியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை

அரசாணை (வா) எண்.323 நாள்: 22.10.2021
பிலவ, ஐப்பசி 05,
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்கப்பட்டவை:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.41075/2019/ஜி.இ.2.1 நாள் 09.09.2021

-----

**ஆணை:**

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் உள்ள கீழ்க்கண்ட அலுவலருக்கு நிர்வாகக் காரணங்களுக்காக பணியிட மாறுதல் மற்றும் பணி நியமனம் பின்வருமாறு வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண். | பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் இடம் (திரு/திருமதி/செல்வி) | வழங்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| (1) | எஸ். தமிழ்ச் செல்வி,<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு),<br>கடலூர் மாவட்டம். | உதவி திட்ட இயக்குநர் (உட்கட்டமைப்பு),<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br><br>(அரசாணை (நிலை) எண்.79 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 29.06.2021–ன்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) |

| | | |
|---|---|---|
| (2) | கே. குமார்,<br>உதவி திட்ட அலுவலர் (ஊதியம் மற்றும் வேலைவாய்ப்பு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் மாவட்டம். | உதவி திட்ட இயக்குநர் (ஊதிய வேலை வாய்ப்பு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மயிலாடுதுறை மாவட்டம்.<br>( காலிப் பணியிடம்) |
| (3) | டி. கிருஷ்ணமூர்த்தி,<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்),<br>திருவாரூர் மாவட்டம். | உதவி திட்ட இயக்குநர் (கணக்கு மற்றும் நிர்வாகம்), மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மயிலாடுதுறை மாவட்டம்<br>(அரசாணை (நிலை) எண்.79 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 29.06.2021–ன்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) |

2. அரசாணை (நிலை) எண்.249, நிதித்(வ.செ.பொ–1) துறை, நாள் 21.05.2020–ன்படி மேற்காண் பணியிடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் யாரும் இந்த பணியிட மாறுதலுக்கு பயணப்படி கோரக் கூடாது என்ற நிபந்தனையுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

3. பணி நியமனம் வழங்கப்பட்ட அலுவலர்கள் பதில் நபரை எதிர்பார்க்காமல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு புதிய பணியில் உடனடியாக சேர அறிவுறுத்தப்படவேண்டுமென சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/ சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பணியில் சேர்ந்த தேதி குறித்த விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**K.கோபால்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்,
**வழி–** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை–34.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–5/18/35.

**நகல்**
மாண்புமிகு அமைச்சர்( ஊரக வளர்ச்சி ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/அந2/உதிரிகள்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

அரசு சார்புச் செயலாளர்

மேற்குறிப்பாணை எண்.40175/2019/ஜி.இ.2.1
நாள்: 22.10.2021

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்
சென்னை.15

அரசாணை (வா) எண்.323, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள்.22.10.2021 சார்வு செய்யப்படுகிறது.

22/10/2021
இயக்குநருக்காக

பெறுநர்:

சம்மந்தப்பட்ட அலுவலர்கள்,

(சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்/அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்:

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர், நாகப்பட்டினம் திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள்.
3. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள்.